**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 06** **நாள்: 17.03.2026**

**சென்னை மாவட்டத்தில் திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளர்கள், நகை அடகு தொழில் செய்வோருக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளர்கள், நகை அடகு தொழில் செய்வோருக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் இன்று (17.03.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**நகை அடகு தொழில் செய்வோருக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் :**

இக்கூட்டத்தில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்-2026-க்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வரப்பெற்ற நிலையில், பொதுக்கூட்டம் / விழாக்கள் போன்ற நிகழ்வுகளின்போது வாக்காளர்களுக்கு மறைமுகமாக அடகு வைத்த நகைகளை திருப்புவதற்கு டோக்கன், அடையாள வில்லைகள் மற்றும் இதர வகைகளை கையாண்டு வருவதை எந்த ஒரு உரிமையாளரும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. மீறினால் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அடகு வைக்கபட்டுள்ள நகைகள் வேட்பாளர்கள்/முகவர்களால் மொத்தமாக மீளத் திருப்பப்பட்டு வாக்காளர்களுக்கு திருப்பி வழங்கப்படுவதை தவிர்க்க வேண்டும். மொத்தமாக நகை அடகு நகைகளை திருப்ப எவரேனும் முற்படின் அல்லது சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு நேரில் வந்தாலோ மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ரிப்பன் கட்டட வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு 1800-425-7012 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் போது அடகு வைக்கப்படும் நகைகள் சந்தேகத்திற்கிடமான வகையில் மீளத் திருப்பப்படும்போது, அவை குறித்த விவரங்களை உடனடியாக அருகாமையிலுள்ள தேர்தல் நடத்தும் அலுவலரைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையகத்தின் விதிமுறைகளை மீறிச் செயல்படுவது கண்டறியப்பட்டால் உடனடியாக உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மேற்கண்ட நிகழ்வுகள் / செயல்பாடுகள் தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு எதிரானதாகும்.

மேற்சொன்ன விதிமுறைகளின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்-2026னை நேர்மையாகவும், சுமூகமாகவும் நடைபெற மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

**திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளர்களுக்கான தேர்தல் நடத்தை விதிமுறைகள் :**

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள அனைத்து திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளரும் வெளியூரிலிருந்து கூட்டமாக வந்து தங்குவதற்கு அனுமதி வழங்கக் கூடாது. திருமணக்கூடம் மற்றும் கூட்ட அரங்கில் திருமணம் மற்றும் சுபநிகழ்வுகள் தவிர வேறு எவ்வித அரசியல் தொடர்புடைய கூட்டங்கள் நடைபெற பதிவு செய்யப்பட்டாலும், அதன் விவரத்தினை முன்கூட்டியே தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும்.

சுபநிகழ்வுகள் என்ற பெயரில் மக்களைக் கூட்டி பரிசுப் பொருட்கள் வழங்குவது, புடவை, வேட்டிகள் வழங்குவது மற்றும் பணம் கொடுப்பது போன்ற நிகழ்வுகள் நடைபெற உள்ளதாக அறியப்பட்டால், அதனை உடனடியாக தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

சுபநிகழ்வுகள் என்ற பெயரில் மக்களைக் கூட்டி உணவுப் பொட்டலங்கள் மற்றும் சாப்பாடு பந்தி பரிமாறுதல் போன்றவை ஏதும் நடைபெறக் கூடாது. அவ்வாறு நடைபெற்றால் அது குறித்த தகவலை உடன் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும். திருமணம் மற்றும் சுபநிகழ்வுகள் நடைபெறும்போது அரசியல் கட்சித் தலைவர்களின் பெயர்கள் மற்றும் உருவங்கள் பொறித்த தட்டிகள், கட்அவுட்டுகள், பேனர்கள், அலங்கார வளைவுகள் ஆகியவற்றினை வைத்து வாக்குகள் சேகரித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றால் அது குறித்த தகவலை உடன் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

தங்கும் விடுதி உரிமையாளர்கள் தேர்தல் நடைபெறும் காலங்களில் உரிய அடையாள அட்டைகளை சரிபார்க்க வேண்டும். மேலும் ஆதார் (அல்லது) புகைப்பட அடையாளத்துடன் கூடிய அடையாள அட்டை நகல்களைப் பெற்ற பின்னரே தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

தேர்தல் தொடர்பாக வெளிமாநிலத்திலிருந்தும்/வெளிமாவட்டங்களிலிருந்தும் வந்து தங்கியிருப்பவர்கள் தேர்தல் பிரச்சாரம் முடிவடையும் நாளன்று உடன் வெளியேறச் செய்ய வேண்டும். குழுவாக தங்க அனுமதிக்கப்படுவர்கள் ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்களை அல்லது பட்டாசுப் பொருட்களையோ வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது. மேற்கூறிய பொருள் தொடர்பாக தேவைப்படின் அருகாமையில் உள்ள காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்சொன்ன விதிமுறைகளின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்-2026னை நேர்மையாகவும், சுமூகமாகவும் நடைபெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.நா.பூஷ்ணாதேவி, நகை அடகு தொழில் செய்வோர், திருமண மண்டபம் மற்றும் கூட்ட அரங்க உரிமையாளர்கள், மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**